# மெட்ரோ பயணத்தில் முக கவசம் கட்டாயம்

சென்னை, நவ. 18–

'சென்னை மெட்ரோ ரயிலில் பயணம் செய்யும் போது, முக கவசம் அணிந்திருப்பது கட்டாயம்' என, அந்நிறுவனம் தெரிவித்து உள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தரப்பில் கூறியதாவது:

கொரோனா பரவுவதைத் தடுக்கும் வகையில், முக கவசம், கிருமி நாசினி திரவம், தனி மனித இடைவெளி கடைப்பிடித்தல் ஆகியவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில் மட்டுமல்லாமல், ரயிலில் பயணம் செய்யும் போதும், முக கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

முக கவசத்தை மெட்ரோ ரயில் நிலையத்திற்குள் நுழைவது முதல், பயணம் முடிந்து வெளியேறும் வரை, கட்டாயம் அணிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு, அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.